உ
சிவமயம்







யாழ்ப்பாணம் - அரியாலையூர்

# திருமதி. சரஸ்வதி - தம்பித்துரை

அவர்களின்

# நினைவு மலர்

14-11-2005

உ

சிவமயம்



யாழ்ப்பாணம் · அரியாலையூரில்

வாழ்ந்து மறைந்த

# திருமதி. சரஸ்வதி – தம்பித்துரை

அவர்களின்

நினைவில் மலர்ந்த

# நினைவு மலர்

14-11-2005

# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தின்
ஒளிவிளக்காய்த் திகழ்ந்து
அன்போடும், பண்போடும், பாசத்தோடும்
எம்மைப் பேணிக் பாதுகாத்து
நல்வழிப்படுத்தி
இவ்வுலகில் நாம் வாழ நல்லனவெல்லாம்
செய்த எமது அன்பு அம்மாவை
நாம் என்றும் மறவோம்.

எமது குடும்ப விளக்கின் பாத கமலங்களில்
இம்மலரினைக்
காணிக்கையாக்குகின்றோம்.

- குடும்பத்தினர் -

சிவமயம்

# திருமதி சரஸ்வதி - தம்பித்துரை



மண்ணில்
04.07.1932

விண்ணில்
15.10.2005

அமரர்

## திதி நிர்ணய வெண்பா

மன்னுமெழில் பார்த்திபவருட மாதமுயர் புரட்டாதி
பொன்னொளிர் திரயோதசி பேர்த்திதியில் - மன்னுலகை
விட்டகன்றாள் சரஸ்வதியாள் விதியின் செயலிதுவாம்
இட்டவனைப் பணிந்தே இரு.

உ



# பஞ்சபுராணம்

## விநாயகர் துதி

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

## தேவாரம்

பேராயிரம் பரவி வானோ ரேத்தும்
பெம்மானைப் பிரிவிலா அடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப் பானை
மந்திரமுந் தந்திரமும் மருந்து மாகித்
தீராதநோய் தீர்த்தருள வல்லான் தன்னை
திரிபுரங்கள் தீயெழத்திண் சிலைகைக் கொண்ட
பேரானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே யாயசிவபத மளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருழுவ தினியே.

## திருவிசைப்பா

பவளமால் வரையைப் பனிபடர்ந் தனையதோர்
படரொளித் திருநீறும்
குவளை மாமலர்க் கண்ணியும் கொன்றையும்
துன்று பொற்குழல் திருச்சடையும்
திவள மாளிகை சூழ்தரு தில்லையுள்
திருநடம் புரிகின்ற
தவள வண்ணனை நினைதொறும் என்மனம்
தழல் மெழு கொக்கின்றதே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம்பயில வல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே யுருவமாகி
அற்புதக் கோல நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள்நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி

## திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தம தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

உ

அமரர்

# திருமதி. சரஸ்வதி - தம்பித்துரை அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

| | | | |
|---|---|---|---|
| எழிலார்ந்த | ஈழத்தின் | ஏற்றமிகு | யாழகத்தில் |
| கனிவார்ந்த | நிலவளமும் | கவினுறும் | கலைவளமும் |
| ஏர்பூத்த | வயல்களும் | எழிலுறும் | சோலைகளும் |
| பேர்பெற்ற | ஆலயங்களும் | பெறார்ந்த | அறிஞர்களும் |
| சீர்வரப் | பெற்ற | சிறந்தநல் | லூராய் |
| சிறப்புடன் | மிளிர்வதே | நல்லரி | யாலையூர். |

| | | | |
|---|---|---|---|
| இத்தனை | சிறப்பும் | இலங்கிடு | மூர்தனில் |
| உத்தம | மனிதராய் | வாழ்ந்தே | மறைந்த |
| சீருயர் | நற்சதா | சிவமென் | பவர்க்கும் |
| நல்லுயர் | நாகம் | மாவென் | பவர்க்கும் |
| ஆயி | ரத்து | தொள்ளா | யிரத்து |
| முப்பத்தி | ரண்டா | மாண்டு | ஆடித்திங்கள் |
| முழுநிறை | நான்காந் | தேதி | தன்னில் |
| அன்புயர் | மகளாய் | அவதரித் | தாரே |
| அறிவுயர் | நற்சரஸ் | வதியெனும் | நல்லாள் |
| மண்ணிலே | மலர்ந்த | மதிநிறை | யாளர் |
| மாண்புயர் | கல்வி | தன்னை | அறிவுயர் |
| நற்ஸ்ரீ | பார்வதி | வித்தியா | சாலையில் |
| நலமுடன் | கற்றே | நற்பேறு | அடைந்தார். |

| | | | |
|---|---|---|---|
| மண்ணிலே | என்றும் | மதிப்புடன் | திகழ்ந்த |
| மதிநிறை | நற்சரஸ் | வதியெனும் | நல்லாள் |
| இம்மண் | தன்னில் | இதமுடன் | வாழ்ந்த |
| நற்சிவக் | கொழுந்து | தம்பதி | பெற்ற |
| நிறைவுயர் | தம்பித் | துரையென் | பவரை |
| ஆயி | ரத்துத் | தொள்ளா | யிரத்து |
| ஐம்பத் | தோரா | மாண்டு | புரட்டாதி |
| நல்லுயர் | நான்காந் | தேதி | தன்னில் |
| இல்லறத் | துணையாய் | இனிதுட | னேற்றார். |

நல்லறங் காக்கும் இல்லற வாழ்வில்
நலமுடன் திகழ்ந்த தம்பித் துரையும்
சீருயர் சரஸ்வதி எனுமுய ராளரும்
இணைந்த இல்லற வாழ்வின் பயனாய்
கனடா தன்னில் வாழும் அன்புயர்
நற்தன பால சிங்கமென் பவரையும்
மதிநிறை நல்மகா லெட்சுமி தனையும்
விருப்புயர் விஜய லட்சுமி என்பரையும்
இலண்டன் மண்ணில் இதமுடன் வாழும்
இனியநல் லிங்க ராஜவென் பவரையும்
பிரான்சில் வாழும் கணேச லிங்கத்தையும்
சீருயர் சோதி லட்சுமி தனையும்
மதிநிறை மோகன லட்சுமி தனையும்
மக்களாய்ப் பெற்றே மகிழ்வது அடைந்தனர்.

நற்தன பால சிங்கம் தன்னை
திருமணம் புரிந்த தனலட் சுமியும்
மதிநிறை மகாலெட் சுமியை மணந்த
நல்நவ ரத்தின ராசாவென் பவரும்
விஜய லட்சுமி தன்னை மணந்த
சீருயர் சங்கர நாதனென் பவரும்
லிங்க ராஜன் தம்மை மணந்த
குணமுயர் நற்குண நிதியென் பவரும்
கணேச லிங்கம் என்பரை மணந்த
விருப்புயர் வாமதனி எனுமுய ராளரும்
சோதி லட்சுமி என்பரை மணந்த
பேறுயர் பரம சிவமென் பவரும்
மோகன லட்சுமி தன்னை மணந்த
முருகா னந்தன் எனுமுய ராளரும்
காலஞ் சென்ற சரஸ்வதி தம்மின்
பேறுயர் நல்மரு மக்களே ஆவர்.

தனபால சிங்கமும் தனலட் சுமியும்
பெற்ற பேறுயர் தயீசன் என்பரும்
நல்நவ ரத்தின ராசா வென்பரும்
மதிநிறை மகா லெட்சுமி என்பவரும்
பெற்ற பேருயர் பிள்ளைக ளாகிய

வசிகரன் வாகீசன்பி ரிசாந்தினி தன்னுடன்
மதிநிறை மனோஜ் எனுமுய ராளரும்
சங்கர நாதன் விஜய லட்சுமி
தம்பதி தம்மின் பிள்ளைக ளாகிய
நற்கிரு சாந்தி காண்டீப னுடனே
ஜிந்துசியா கஜனி றஜீபன் என்போரும்
லிங்க ராஜனும் குணநிதி என்பரும்
பெற்ற அன்புயர் மக்களே யாகிய
ஆதரை அஞ்சலி அர்ச்சுனா என்போரும்
கணேச லிங்கமும் வாமதனி என்பவரும்
பெற்ற அன்புயர் நகிதா என்போரும்
பரம சிவமும் சோதிலட் சுமியும்
அன்புடன் பெற்ற செல்வங்க ளாகிய
யாழினி கம்பதாசன் ஜனனி குயிலினியும்
முருகா னந்தனும் மோகன லட்சுமியும்
பெற்ற அன்புயர் கஸ்தூரி என்பவரும்
காலஞ் சென்ற சரஸ்வதி தம்மின்
பேறுயர் பேர மக்களே ஆவர்.

மண்ணக வாழ்வை விட்டுமே மறைந்த
தர்ம லிங்கமும் பாலசுப்ர மணியமும்
பேறுயர் பாலாம் பிகையென் பவரும்
இம்மண் தன்னில் இதமுடன் வாழும்
குணமுயர் நல்மகா தேவனென் பவரும்
காலஞ் சென்ற சரஸ்வதி என்பரின்
கூடப் பிறந்த வர்களே ஆவர்.

தர்ம லிங்கம் தம்மை மணந்த
காலஞ் சென்ற அன்னபூரணி அம்மாவும்
பால சுப்பிர மணியம் தன்னை
மணமது புரிந்த இராசம் மாவும்
பாலாம் பிகையை திருமணம் செய்த
சீருயர் சோம சேகரம் என்பரும்
நல்மகா தேவன் தன்னை மணந்த
குணமுயர் குமார ராணியென் பவரும்
காலஞ் சென்ற சரஸ்வதி தம்மின்
மதிப்புயர் மைத்துனர் மைத்துனி மார்களே.

சரஸ்வதிதம மின் கணவ ராகிய
தம்பித் துரையின் சோதரர் களாகிய
காலஞ் சென்ற விஜயலட் சுமியும்
நற்சறோ ஜினியும் சிவபாக் கியமும்
யோகம் மாவும் முத்துக்குமார சாமியும்
சீருயர் யோக நாதனென் பவரும்
காலஞ் சென்ற சரஸ்வதி என்பரின்
மைத்துனர் மைத்துனி மார்களே ஆவர்.

சுற்றம் நிறைய சூழ்ந்திருந் தாலும்
தூயநல் லிறைவன் விதித்த விதிப்படி
இத்தரை தனிலே பிறப்பவர் இறப்பர்
என்ற உண்மை தனையே ஏற்று
சென்றார் இறையடி சரஸ்வதி நல்லாள்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!



## தேற்றம்

அவன் விளிப்பின்றி எந்த
அணுவுமே அசையா தென்பர்
சிவன் விதிப்படியே வந்து
செகத்தினில் பிறந்தார் வாழ்ந்தார்
எவனெதை விதைத்துள்ளானோ
அவனதை அறுத்தே கொள்வான்
கவலையை விடுமின் எல்லாம்
கடவுளின் செயலேயாகும்.

கவியாக்கம் :
அரியாலையூர், **வே. ஐ. குமரதாசன்**
( ஆசிரியர் )

உ
கணபதி துணை.



# பிள்ளையார் கதை

காப்பு

கரும்பு மிளநீருங் காரெள்ளுந் தேனும்
விரும்பு மவல்பலவும் மேன்மே · லருந்திக்
குணமுடைய னாய்வந்து குற்றங்க டீர்க்குங்
கணபதியே யிக்கதைக்குக் காப்பு.

திருவிளக்கு மான்மருகா சேவதனி லேறி
வருமரன்றா னீன்றருளு மைந்தா · முருகனுக்கு
முன்பிறந்த யானை முகவா வுனைத்தொழுவேன்
என் கதைக்கு நீயென்றுங் காப்பு.

வீநாயகர் துதி

திருவாக்கும் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கு · முருவாக்கும்
ஆதலால் வானோரு மானைமுகத் தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை.

ஒற்றை மருப்பு மோரிரண்டு கைத்தலமும்
வெற்றி புனைந்த விழிமூன்றும் · பெற்றதொரு
தண்டைக்கால் வாரணத்தைத் தன்மனதி லெப்பொழுதுங்
கொண்டக்கால் வாராது கூற்று.

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்தருவேன் · கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா.

## சப்பாணி

எள்ளுப் பொரிதே னவலப்ப மிக்கும் பயறுமிளநீரும், வள்ளிக்கிழங்கும் மாம்பழமும், வாழைப்பழமும், பலாப்பழமும், வெள்ளைப் பாலும், மோதகமும் விரும்பிப் படைத்தேன் சந்நிதியில், கொள்ளைக் கருணைக் கணபதியே கொட்டி யருள்க சப்பாணி.

சண்டப் பெருச்சாளியேறிச் சடைகொண்டு வையத் துலாவி, அண்டத் தமரர் துதிக்க வடியார்க் கருளும் பிரானே, எண்டிக்கு மன்பர்கள் பார்க்க இணையற்ற பேரொளி வீசக், குண்டைக் கணபதி நம்பி கொடுங்கையாற் சப்பாணி கொட்டே.

## சரஸ்வதி துதி

புத்தகத் துள்ளுறை மாதே
பூவி லமர்ந்திடு வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளை நங்காய்
வேதப் பொருளுக் கிறைவீ
முத்தின் குடையுடை யாளே
மூவுல குந்தொழு தேத்துஞ்
செப்புக் கவித்த முலையாய்
செவ்வரி யோடிய கண்ணாய்
தக்கோலந் தின்னும் வாயாய்
சரஸ்வதி யென்னுந் திருவே
எக்காலமு முன்னைத் தொழுவே
னியலிசை நாடக மென்னும்
முத்தமிழ்க் கல்விக ளெல்லா
முழுது மெனக்கருள் செய்தென்
சித்தந் தனில் நீயிருந்து
திருவருள் செய்திடு வாயே.

## அதிகாரம்

பொன்னிறங் கடுக்கும் புனற்செறி குடுமித்
தென்மலை யிருந்த சீர்சால் முனிவன்
கந்த மும்மதக் கரிமுகன் கதைதனைச்
செந்தமிழ் வகையாற் றெளிவுறச் செப்பினன்
அன்னதிற் பிறவில் அரிறபத் திரட்டித்
தொன்னெறி விளங்கச் சொல்லுவன் கதையே.

# கதை

மந்தர கிரியில் வடபா லாங்கோர்
இந்துதவழ் சோலை யிராசமா நகரியில்
அந்தண னொருவனு மாயிழை யொருத்தியுஞ்
சுந்தரப் புதல்வரைப் பெறுதல் வேண்டிக்
கடவுளா லயமுங் கடிமலர்ப் பொய்கையுந்
தடநிழற் பள்ளியுந் தாம்பல சமைத்துப்
புதல்வரைத் தருகெனப் பொருப்பா சீன்ற
மதர்விழி பாகனை வழிபடு நாளின்
மற்றவர் புரியு மாதவங் கண்டு
சிற்றிடை யுமையாள் சிவனடி வணங்கிப்
பரனே சிவனே பல்லுயிர்க் குயிரே
அரனே மறையவர்க் கருள்புரிந் தருளென
அந்தவந் தணனுக் கிந்தநற் பிறப்பின்
மைந்தரில் லையென்று மறுத்தர னுரைப்ப
எப்பரி சாயினும் மெய்பொருட் டொருசுதன்
தப்பிலா மறையோன் றனக்கருள் செய்கென
எமையா ளுடைய யுமையாண் மொழிய
இமையா முக்க ணிறைவன் வெகுண்டு
பெண்சொற் கேட்டல் பேதமை யென்று
பண்சொற் பயிலும் பாவையை நோக்கிப்
பேதாய் நீபோய்ப் பிறவென மொழிய
மாதுமை யவளும் மனந்தளர் வுற்றுப்
பொன்றிடு மானிடப் புன்பிறப் பெய்துதல்
நன்றல வென்றே நடுக்கமுற் றுரைப்பக்
கறைமிடற் றண்ணல் கருணை கூர்ந்து
பிறைநுத லவட்குநீ பிள்ளை யாகச்
சென்றவண் வளர்ந்து சிவபகற் கழித்தால்
மன்றல்செய் தருள்வோம் வருந்தலை யென்று
விடைகொடுத் தருள விலங்கன்மா மகளும்
பெடைமயிற் சாயற் பெண்மக வாகித்
தார்மலி மார்பன் சதுர்மறைக் கிழவன்
சீர்மலி மனைவி திருவயிற் றுதித்துப்
பாவையுஞ் சிற்றிலும் பந்தொடு கழங்கும்
யாவையும் பயின்ற வியல்பின ளாகி
ஐயாண் டடைந்தபி னன்னையு மத்தனும்

மையார் கருங்குழல் வாணுத றன்னை
மானுட மறையோர்க்கு வதுவை செய்திடக்
கானமர் குழலியைக் கருதிக் கேட்பப்
பிறப்பிறப் பில்லாப் பெரியோற் கன்றி
அறத்தகு வதுவைக் கமையேன் யானென
மற்றவன் றன்னையுன் மணமக னாகப்
பெற்றிட லரிதெனப் பெயர்த்தவர் பேச
அருந்தவ முயற்சியா லணுகுவே னியானெனக்
கருந்தட நெடுங்கட் கவுரியங் குரைப்ப
மருமலி கமல மலர்த்தடத் தருகிற்
றருமலி நிழற்றவச் சாலைய தமைத்துப்
பணியணி பற்பல பாங்கியர் சூழ
அணிமலர்க் குழலுமை யருந்தவம் புரிதலும்
அரிவைத னருந்தவ மறிவோம் யாமென
இருவரு மறியா விமையவர் பெருமான்
மானிட மேத்தும் வண்ணம தொழிந்து
மானிட யோக மறையவ னாகிக்
குடையொடு தண்டுநற் குண்டிகை கொண்டு
மடமயி றவம்புரி வாவிக் கரையிற்
கண்ணுதல் வந்து கருணை காட்டித்
தண்ணறுங் கூந்தற் றையலை நோக்கி
மின்பெறு நுண்ணிடை மெல்லிய லாய்நீ
என்பெறத் தவமிங் கியற்றுவ தென்றலுங்
கொன்றைவார் சடையணைக் கூடவென் றுரைத்தலும்
நன்றெனச் சிரித்து நான்மறை யோனும்
மாட்டினி லேறி மான்மழுத் தரித்துக்
காட்டினிற் சுடலையிற் கணத்துட னாடிப்
பாம்பும் மெலும்பும் ப·றலை மாலையுஞ்
சாம்பரு மணிந்து தலையோ டேந்திப்
பிச்சைகொண் டுழலும் பித்தன் றன்னை
நச்சிநீர செய்தவ நகைதரு நுமக்கெனப்
பூங்கொடி யருந்தவம் பூசுரன் குலைத்தலும்
ஆங்கவ ணாணமுற் றணிமனை புகுதச்
சேடியர் வந்து செழுமலர்க் குழலியை
வாடுத லொழிகென மனமிகத் தேற்றிச்
சிந்துர வாணுதற் சேடியர் சிலர்போய்த்
தந்தைதா யிருவர் தாளிணை வணங்கி

வாவிக் கரையில் வந்தொரு மறையோன்
பாவைதன் செங்கையைப் பற்றின னென்றலுந்
தோடலர் கமலத் தொடைமறை முனியை
ஆடக மாடத் தணிமனை கொணர்கென
மாடக யாழ்முரல் மங்கைய ரோடி
நீடிய புகழாய் நீயெழுந் தருளென
மைமலர்க் குழலி வந்தெனை யழைக்கில்
அம்மனை புகுவனென் றந்தண னுரைத்தலும்
பொற்றொடி நீபோய்ப் பொய்கையி னின்ற
நற்றவ முனியை நடாத்திக் கொணர்கென
சிவனை யிகழ்ந்த சிற்றறி வுடையோன்
அவனையான் சென்றிங் கழைத்திடே னென்று
சிற்றிடை மடந்தையுஞ் சீறின ளாகி
மற்றைய மாதர் மதிமுக னோக்கி
நெற்றியிற் கண்ணுடை நிமலனுக் கல்லதென்
பொற்பமர் கொங்கை பொருந்துதற் கரிதால்
மானிட வேட மறையவன் றனக்கு
யான்வெளிப் படுவ தில்லையென் றிசைப்ப
மலையிடை வந்த மாமுனி தன்னை
இணையடி தொழுத விளையோர்க் கியல்பெனத்
தந்தையுந் தாயுந் தகைபெற மொழியச்
சிந்தை குளிர்ந்து சீறுத லொழிந்து
தாய்சொன் மறுத்தல் பாவமென் றஞ்சி
ஆயிழை தானு மவனெதிர் சென்று
சுற்றிவந் தவனடி சுந்தரி வணங்கி
மற்றவன் றன்னை மனையிற் கொணர்ந்து
ஆதியம் பகவற் கன்ப னாகும்
வேதியன் பழைய விருத்தனென் றெண்ணி
ஆசன நல்கி யருக்கிய முதலாப்
பாதபூ சனைகள் பண்ணிய பின்னர்ப்
போனகம் படைத்துப் பொரிக்கறி பருப்புநெய்
ஆன்பால் மாங்கனி யழகிய பலாச்சுளை
தேன்கத லிப்பழஞ் சீர்பெறப் படைத்து
அந்தணன் றன்னை அமுதுசெய் வித்துச்
சந்தனங் குங்குமச் சாந்திவை கொடுத்துத்
தக்கோ லத்தொடு சாதிக் காயும்
கர்ப்பூ ரத்தோடு கவின்பெறக் கொண்டு
வெள்ளிலை யடைக்காய் விளங்கிய பொன்னின்
ஒள்ளிள தட்டி லுவந்துமுன் வைத்துச்
சிவனெனக் பாவனை செய்து நினைந்து

தவமறை முனிவனைத் தாளிணை வணங்கித்
தேனமர் குழலி திருமுக நோக்கி
மோனமா முனிபுன் முறுவல் காட்டிக்
கற்றைச் சடையுங் கரமொரு நான்கும்
நெற்றியி னயனமு நீல கண்டமும்
மானு மழுவு மலர்க்கரத் திலங்கக்
கூன்மதி நிலவுங் கொழித்திட முடிமேல்
வரந்தரு முதல்வன் மடமயில் காணக்
கரந்ததன் னுருவங் காட்டிமுன் னிற்ப
மரகத மேனி மலைமக டானும்
விரைவொடங் கவனடி வீழ்ந்திறைஞ் சினளே
அரியய னிந்திர னமரர் விஞ்சையர்
கருடர் கின்னரர் காய வாசியர்
ஏதமில் முனிவ ரவுண ரிராக்கதர்
பூத ரியக்கர்கிம் புருட ரலகை
சித்தர்தா ரகைகந் தருவர்கள் முதலாய்க்
கணிக்கரும் பதினெண் கணத்திலுள் ளவரும்
மணிக்கருங் களத்தனை வந்தடைந் ததற்பின்
மன்றலங் குழலிக்கு வதுவைநாட் குறித்துத்
தென்றல்வந் திலங்கு முன்றி லகத்துப்
பொன்றிகழ் பவளப் பொற்கா னாட்டி
மாணிக் கத்தால் வளைபல பரப்பி
ஆணிப்பொற் றகட்டா லழகுற வேய்ந்து
நித்தில மாலை நிரைநிரை தூக்கிப்
பத்திக டோறும் பலமணி பதித்துத்
தோரண நாட்டித் துகில்விதா னித்துப்
பூரணப் பொற்குடம் பொலிவுற வைத்துத்
திக்குத் தோறுந் திருவிளக் கேற்றிப்
பத்திப் படர்முளைப் பாலிகை பரப்பிக்
கன்னலுங் கமுகுங் கதலியு நாட்டிப்
பன்மலர் நாற்றிப் பந்தர்சோ டித்து
நலமிகு கைவலோர் நஞ்சணி மிடற்றனைக்
குலவிய திருமணக் கோலம் புனைந்தார்
வருசுரர் மகளிர் மலைமக டன்னைத்
திருமணக் கோலஞ் செய்தன ராங்கே
எம்பி ரானையு மிளங்கொடி தன்னையும்
உம்ப ரெல்லா மொருங்குடன் கூடிக்
கடலென விளங்குங் காவணந் தன்னிற்
சுடர்விடு பவளச் சுந்தரப் பலகையின்
மறைபுகழ்ந் தேத்த மகிழ்ந்துட னிருத்திப்

பறையொலி யோடு பனிவளை யார்ப்ப
வதுவைக் கேற்ற மறைவிதி நெறியே
சதுர்முக ஹோமச் சடங்குக ளியற்றக்
தறுகலற் றொளிபொற் றாலி பூட்டிச்
சிறுமதி நுதலியைச் சிவன்கைப் பிடித்தபின்
அரிவலஞ் சூழ வெரிவலம் வந்து
பரிவுடன் பரிமளப் பாயலில் வைகிப்
போதணி கருங்குழற் பூவைதன் னுடனே
ஓதநீர் வேலைசூ *ழுஞ்சையம் பதிபுக
ஏரார் வழியி னெண்டிசை தன்னைப்
பாரா தேவா பனிமொழி நீயென
வருங்கருங் குழலாண் மற்றுமுண் டோவெனத்
திருந்திழை மடந்தை திரும்பினள் பார்க்கக்
களிறும் பிடியும் கலந்துவிளை யாடல்கண்
டொளிர்மணி பூணா ளுரவோ னுடனே
இவ்வகை யாய்விளை யாடுவோ மீங்கென
அவ்வகை யரனு மதற்குடன் பட்டு
மதகரி யுரித்தோன் மதகரி யாக
மதர்விழி யுமைபிடி வடிவம தாகிக்
கூடிய கலவியிற் குவலயம் விளங்க
நீடிய வானோர் நெறியுடன் வாழ
அந்தணர் சிறக்க வானினம் பெருகச்
செந்தழல் வேள்விவே தாகமஞ் சிறக்க
அறம்பல பெருக மறம்பல சுருங்கத்
திறம்பல வரசர் செகதலம் விளங்க
வெங்கரி முகமும் வியன்புழைக் கையோ
டைங்கர தலமு மலர்ப்பத மிரண்டும்
பவளத் தொளிசேர் பைந்துவர் வாயுந்
தவளக் கிம்புரித் தடமருப் பிரண்டுங்
கோடிசூ ரியர்போற் குலவிடு மேனியும்
பேழைபோ லகன்ற பெருங்குட வயிறும்
நெற்றியி னயனமு முப்புரி நூலுங்
கற்றைச் சடையுங் கனகநீண் முடியுந்
தங்கிய முறம்போற் றழைமடிச் செவியுமாய்
ஐங்கரத் தண்ணல் வந்தவ தரித்தலும்
பொங்கர வணிந்த புண்ணிய மூர்த்தியும்
மங்கை மனமிக மகிழ்ந்துட னோக்கி
விண்ணு ளோர்களும் விரிந்தநான் முகனும்

---

* உஞ்சையம்பதி - அவந்திநகர்

மண்ணு ளோர்களும் வந்துனை வணங்க
ஆங்கவர் தங்கட் கருள்சுரந் தருளித்
தீங்கது தீர்த்துச் செந்நெறி யளித்துப்
பாரண மாகப் பலகனி யருந்திப்
ஏரணி யாலின்கீ ழினிதிரு வென்று
பூதலந் தன்னிற் புதல்வனை யிருத்திக்
காதல்கூர் மடநடைக் கன்னியுந் தானும்
மைவளர் சோலை மாநகர் புகுந்து
தெய்வ நாயகன் சிறந்தினி திருந்தபின்
வானவ ராலும் மானுட ராலுங்
கானமர் கொடிய கடுவிலம் காலுங்
கருவிக ளாலுங் கால னாலுங்
ஒருவகை யாலு முயிரழி யுரமல்
திரம்பெற மாதவஞ் செய்துமுன் னாளில்
வரம்பெறு கின்ற வலிமையி னாலே
ஐமுகச் சீயமொத் தடற்படை சூழக்
கைமுகம் படைத்த கயமுகத் தவுணன்
பொன்னுல கழித்துப் புலவரை வருத்தி
இந்நிலத் தவரை யிடுக்கண் படுத்திக்
கொடுந்தொழில் புரியுங் கொடுமைகண் டேங்கி
அடுந்தொழிற் குலிசத் தண்ணலு மமரருங்
கறைபடு கண்டக் கடவுளைப் போற்றி
முறையிடக் கேட்டு முப்புர மெரித்தோன்
அஞ்சலி ரென்றவர்க் கபயங் கொடுத்தே
அஞ்சுகைக் கரிமுகத் தண்ணலை நோக்கி
ஆனை மாமுகத் தவுணனோ டவன்றன்
சேனைகள் முழுவதுஞ் சிந்திடப் பொருது
குன்றுபோல் வளர்ந்த குறட்படை கூட்டி
வென்றுவா வென்று விடைகொடுத் தருள
ஆங்கவன் றன்னோ டமர்பல வுடற்றிப்
பாங்குறு மவன்படை பற்றறக் கொன்றபின்
தேர்மிசை யேறிச் சினங்கொடு செருவிற்
கார்முகம் வளைத்த கயமுகா சுரன்மேல்
ஒற்றைவெண் மருப்பை யொடித்தவ னுரத்திற்
குற்றிட வெறிந்தான் குருதிசோர்ந் திடவே
சோர்ந்தவன் வீழ்ந்து துண்ணென வெழுந்து
வாய்ந்தமூ டிகமாய் வந்தவன் பொரவே
வந்த மூடிகத்தை வாகன மாக்கி
எந்தை விநாயக னேறின னிப்பால்

எறிந்தவெண் மருப்பங் கிமைநொடி யளவிற்
செறிந்தது மற்றவன் றிருக்கரத் தினிலே
வெல்லவைக் கதிர்வேல் விழிபடைத் தருளும்
வல்லவை தனைத்தன் மனையென மணந்தே
ஓகையோ டெழுந்தாங் குயர்படை சூழ
வாகையும் புனைந்து வரும்வழி தன்னிற்
கருச்சங் கோட்டிக் கயல்முக கேறுந்
திருச்செங் காட்டிற் சிவனையர்ச் சித்துக்
கணபதீச் சரமெனுங் காரண நாமம்
பணபதி புகழ்தரு பதிக்குண் டாக்கிச்
சங்கரன் பார்ப்பதி தனிமன மகிழ
இங்குவந் தன்புட னெய்திய பின்னர்க்
கணங்களுக் கரசாய்க் கதிர்முடி சூட்டி
இணங்கிய பெருமைபெற் றிருந்திட வாங்கே
தேவர்கள் முனிவர் சித்தர்கந் தருவர்
யாவரும் வந்திவ னேவல்செய் திடுநாள்
அதிகமா யுரைக்கு மாவணித் திங்களின்
மதிவளர் பக்கம் வந்திடு சதுர்த்தியில்
விநாயகர்க் குரிய விரதமென் றெண்ணி
மனாதிகள் களித்து மரபொடு நோற்றார்
இப்படி நோற்றிட் டெண்ணிய பெருநாள்
ஒப்பரும் விரதத் துறுமொரு சதுர்த்தியில்
நோற்றுநற் பூசை நுடங்கா தாற்றிப்
போற்றிசெய் திட்டார் *புலவரைங் கரனை
மருமலர் தூவும் வானவர் முன்னே
நிருமலன் குமர நிருத்தம் புரிந்தான்
அனைவரும் கைதொழ தடியிணை போற்ற
வனைகழற் சந்திரன் மனஞ்நெருக் கதனால்
பேழைபோல் வயிறும் பெருத்தகாத் திரமும்
தாழ்துளைக் கையுந் தழைமுறச் செவியுங்
கண்டன னகைத்தான் கரிமுகக் கடவுளுங்
கொண்டனன் சீற்றங் *குபேரனை நோக்கி
என்னைக் கண்டிங் கிகழ்ந்தனை சிரித்தாய்
உன்னைக் கண்டவ ருரைக்குமித் தினத்திற்
பழியொடு பாவமும் பலபல விதனமும்
அழிவுமெய் துவரென் றசனிபோற் சபித்தான்
விண்ணவ ரெல்லா மிகமனம் வெருவிக்

---

* புலவர் - தேவர்

* குபேரன் - சந்திரன்

கண்ணருள் கூருங் கடவுளித் தினத்திற்
கோரவெஞ் சினமிகக் கொண்டன னந்நாண்
மார்கழித் திங்கண் மதிவளர் பக்கஞ்
சதயந் தொட்ட சட்டிநல் விரதமென்
றிதயத் தெண்ணி யாவரு நோற்றார்
இப்புவி மாந்த ரியம்பிய விரதம்
வைப்புட னோற்ற வகையினைச் சொல்வாம்
குருமணி முடிபுனை குருகுலத் துதித்த
தருமனு மிளைய தம்பியர் நால்வருந்
தேவகி மைந்தன் றிருமுக நோக்கி
எண்ணிய விரத மிடையூ றின்றிப்
பண்ணிய பொழுதே பலிப்புண் டாகவுஞ்
செருவினி லெதிர்த்த செறுநரை வென்று
மருமலர்ப் புயத்தில் வாகை சூடவும்
எந்தத் தெய்வ மெவ்விர தத்தை
வந்தனை செய்யில் வருநமக் குரையெனப்
பாட்டளி துதையும் பசுந்துழாய் மார்பனுங்
கேட்டருள் வீரெனக் கிளர்த்துத லுற்றான்
அக்குநீ றணியு மான்முத லளித்தோன்
விக்கினந் தீர்க்கும் விநாயக மூர்த்தி
ஓடவைத் திடும்பொன் னொத்தொளி விளங்குங்
கோடிசூ ரியர்போற் குலவிய மேனியன்
கடகரி முகத்தோன் காத்திரம் பெருத்தோன்
தடவரை போலுஞ் சதுர்ப்புய முடையோன்
சர்வா பரணமுந் தரிக்கப் பட்டவன்
உறுமதிக் குழவிபோ லொருமருப் புடையோன்
ஒருகையிற் றந்தமு மொருகையிற் பாசமும்
ஒருகையின் மோதக மொருகையிற் செபஞ்செய்
உத்தம மாலையோ னுறுநினை வின்படி
சித்திசெய் வதனாற் சித்திவி நாயகன்
என்றிமை யவரும் யாவருந் துதிப்ப
நன்றித ருந்திரு நாமம் படைத்தோன்
புரவலர்க் காணப் புறப்படும் போதுஞ்
செருவினில் யுத்தஞ் செய்திடும் போதும்
வித்தியா ரம்பம் விரும்பிடும் போதும்
உத்தியோ கங்க ளுஞற்றிடும் போதும்
ஆங்கவன் றன்னை யருச்சனை புரிந்தால்
தீங்குறா தெல்லாஞ் செயமுண் டாகும்

கரதல மைந்துடைக் கணபதிக் குரிய
விரதமொன் ளுளதனை விரும்பிநோற் றவர்க்குச்
சந்ததி தழைத்திடுஞ் சம்பத் துண்டாம்
புந்தியி னினைந்த பொருள்கை கூடும்
மேலவர் தமையும் வென்றிட லாமெனத்
தேவகி மைந்தன் செப்பிடக் கேட்டு
நுவலரும் விரதம் நோற்றிடு மியல்பும்
புகர்முகக் கடவுளைப் பூசைசெய் விதமும்
விரித்தெமக் குரைத்திட வேண்டுமென் றிரப்ப
வரைக்குடை கவித்தோன் வகுத்துரை செய்வான்
தேருநீ ராவணித் திங்களின் மதிவளர்
பூர்வ பக்கம் புணர்ந்திடு சதுர்த்தியின்
முந்தும் புலரியின் முறைநீர் படிந்து
சந்தி வந்தனந் தவறா தியற்றி
அத்தின மதனி லைங்கரக் கடவுளைப்
பத்தியோ டர்ச்சனை பண்ணுதல் வேண்டும்
வெள்ளியாற் பொன்னால் விளங்கும வன்றன்
ஒள்ளிய வருட்டிரு வுருவுண் டாக்கிப்
பூசனை புரியப் புகன்றனர் பெரியோர்
ஆசிலா மண்ணா லமைத்தலுந் தகுமால்
பூசனைசெய் திடுமிடம் புனிதம தாக்கி
வாசமென் மலரின் மஞ்சரி தூக்கிக்
கோடிகங் கோசிகங் கொடிவிதா னித்து
நீடிய நூல்வளை நிறைகுடத் திருத்தி
விந்தைசேர் சித்தி விநாயக னுருவைச்
சிந்தையி னினைந்து தியானம் பண்ணி
ஆவா கனமுத லர்க்கிய பாத்தியம்
வாகா ராச மனம்வரை கொடுத்து
ஐந்தமிர் தத்தா லபிடே கித்துக்
கந்தஞ் சாத்திக் கணேசமந் திரத்தால்
ஈசுர புத்திர னென்னுமந் திரத்தால்
மாசக லிரண்டு வத்திரஞ் சாத்திப்
பொருந்துமை சுதனாப் புகலுமந் திரத்தாற்
றிருந்தும் பளிதத் தீபங் கொடுத்துப்
பச்சறு குடனிரு பத்தொரு விதமாப்
பத்திர புட்பம் பலபல கொணர்ந்தே
உமாசுதன் கணாதிப னுயர்கரி முகத்தோன்
குமார குரவன் பாசாங் குசகரன்
ஏக தந்த னீசுரன் புத்திரன்
ஆகு வாகன னருடரு விநாயகன்

சர்வகார ரியமுந் தந்தருள் புரிவோன்
ஏரம்ப மூர்த்தி யென்னுநா மங்களால்
ஆரம் பத்துட னர்ச்சனை பண்ணி
மோதக மப்ப முதற்பணி காரத்
தீதகன் மாங்கனி தீங்கத லிப்பழம்
வருக்கை கபித்த மாதுளங் கனியொடு
தரித்திடு நெட்டிலைத் தாழைமுப் புடைக்காய்
பருப்புநெய் பொரிக்கறி பாறயிர் போனகம்
விருப்புள சுவைபொருள் மிகவுமுன் வைத்து
உருத்திரப் பிரியவென் றுரைக்குமந் திரத்தால்
நிருத்தன் மகற்கு நிவேதனங் கொடுத்து
நற்றவர் புகன்றநா னான்குப சாரமும்
மற்றவன் றிருவுள மகிழ்ந்திடச் செய்து
எண்ணுந் தகுதி யிருபிறப் பாளர்க்
குண்ணறு சுவைசே ரோதன நல்கிச்
சந்தன முத்துத் தானந் தக்கிணை
அந்தணர்க் கீந்திட் டருச்சகன் றனக்குத்
திருத்தகும் விநாயகத் திருவுரு வத்தைத்
தரித்தவத் திரத்துடன் றானமாக் கொடுத்து
நைமித திகமென நவிறகு மரபால்
இம்முறை பூசனை யாவர்செய் தாலும்
எண்ணிய கருமம் யாவையு முடிப்பர்
திண்ணிய செருவிற் செயமிகப் பெறுவர்
அரனிவன் றன்னைமுன் னர்ச்சனை பண்ணிப்
புரமொரு மூன்றும் பொடிபட வெரித்தான்
உருத்திர னிவனை யுபாசனை பண்ணி
விருத்திரா சுரனை வென்றுகொன் றிட்டான்
அகலிகை யிவன்றா ளர்ச்சனை பண்ணி
பகர்தருங் கணவனைப் பரிவுட னடைந்தான்
தண்ணார் மதிமுகத் தாடம யந்தி
அன்னா ளிவனை யர்ச்சனை பண்ணி
நண்ணார் பரவு நளனைய டைந்தாள்
ஐங்கரக் கடவுளை யர்ச்சனை பண்ணி
வெங்கத நிருதரை வேரறக் களைந்து
தசரதன் மைந்தன் சீதையை யடைந்தான்
பகிரத னென்னும் பார்த்திவ னிவனை
மகிதலந் தன்னின் மலர்கொடர்ச் சித்து
வரநதி தன்னை வையகத் தழைத்தான்
அட்டதே வதைகளு மர்ச்சித் திவனை

அட்டபோ கத்துட னமிர்தமும் பெற்றார்
உருக்மணி யென்னு மொண்டொடி தன்னைச்
செருக்கொடு வவ்விச் சிசுபா லன்றான்
கொண்டுபோ மளவிற் குஞ்சர முகவனை
வண்டுபாண் மிழற்றா மலர்கொடர்ச் சித்துத்
தாரியின் மறித்தவன் றன்னைப்புறங் கண்டு
யாமுமங் கவளை யின்புறப் பெற்றோம்
புகர்முகக் கடவுளைப் பூசனை புரிந்து
மிகமிக மனத்தில் விழைத்தன பெற்றார்
இப்புவி தன்னி லெண்ணுதற் கரிதால்
அப்படி நீவிரு மவனையர்ச் சித்தால்
எப்பொருள் விரும்பினீ ரப்பொருள் பெறுவீர்
என்றுகன் றெறிந்தோ னெடுத்திவை யுரைப்ப
அன்றுமுற் றருமனு மனுசரு மிவனைப்
பூசனை புரிந்து*கட் புலனிலான் மைந்தரை
நாசனம் பண்ணி நராதிப ராகிச்
சிந்தையி னினைந்தவை செகத்தினிற் செயங்கொண்
டந்தமில் செல்வத் தரசியல் பெற்றார்
ஈங்கிது நிற்க விவ்விர தத்தியல்
ஓங்கிய காதைமற் றொன்றுரை செய்வாம்
கஞ்சநான் முகன்றருங் காசிபன் புணர்ந்த
வஞ்சக மனத்தாண் மாயைதன் வயிற்றிற்
சூரனென் றொருவனுந் துணைவருந் தோன்றி
ஆர்கலி சூழ்புவி யனைத்தையு மளித்தே
சீருடைச் சுவர்க்கத் திரவளங் கெடுத்தும்
புரந்தரன் முதலிய புலவரை வருத்தியும்
நிரந்தரந் தீய நெறிநடத் துதலால்
ஆயிரங் கண்ணனு மமரரு முனிவரும்
நீயிரங் கெமக்கென நெடுங்கரங் கூப்பி
இரசத கிரியுறை இறைவனை வணங்கி
வரமிகுஞ் சூரன் வலிமைக ளுரைக்கச்
சுடர்விடு வடிவேல் கரதலத் தேந்தும்
புதல்வனைத் தருவோம் போமி னீரென
அமரர் கோனுக் கரன்விடை கொடுத்துச்
சமர வேல்விழித் தையலுந் தானுங்
கூடிய கலவியிற் கூடா தூடலும்
ஓடிய வானோ ரொருங்குடன் கூடிப்

---

*கட்புனனிலான் - திருதராட்டிரன்

பாவகன் றன்னைப் பரிவுட னழைத்துச்
சூரன் செய்யுந் துய்ர மெல்லாம்
ஊரர வணிந்தோற் குரையென வுரைப்பக்
காமனை யெரித்த கடவுளென் றஞ்சிப்
பாவகன் பயமுறப் பயமுனக கேதென
உற்றிடுங் கரதலத் துன்னையே தரித்தான்
நெற்றியி னயனமு நீயே யாதலிற்
குற்ற மடாது கூறுநீ சென்றென
வானவர் மொழிய மற்றவன் றானுந்
தானுமச் சபையிற் றரியா தேகி
எமையா ளுடைய வுமையா ளுடனே
அமையா வின்பத் தமர்ந்தினி திருந்த
பள்ளி மண்டபம் பாலகன் குறுகலும்
ஒள்ளிய மடந்தை ஒதுங்கிநா ணுதலுந்
தெள்ளிதிற் பரமனுந் தேயுவைக் கண்டே
அறுமுகப் பிள்ளையை யவன்கையி லீதலும்
வறியவன் பெற்ற வான்பொருள் போலச்
சோதி நீண்முடிச் சுடரோன் கொணர்ந்து
வாத ராசன் மலர்கையிற் கொடுப்ப
நீதி யோடு நின்றுகை யேந்திப்
போதநீள் வாயுவும் பொறுக்கவொண் ணாமற்
றரும்புனற் கங்கை தன்கையிற் கொடுப்பத்
தரும்புனற் கங்கையுந் தாங்கவொண் ணாமற்
பொருந்திரைச் சரவணப் பொய்கையில் வைப்பத்
தண்ணார் வதனத் தாமரை யாறுங்
கண்ணா றிரண்டுங் கரமீ ராறுந்
தூணெனத் திரண்ட தோளீ ராறும்
மாணயி லாதி வான்படை யுங்கொண்
டறுமுகக் கடவுளங் கவதரித் திடலும்
மறுவிய வும்பர் மகிழ்வுடன் கூடி
அறுமீன் களைப்பா லளித்திரென் றனுப்ப
ஆங்கவர் முலையுண் டறுமுகன் றானும்
ஓங்கிய வளர்ச்சி யுற்றிடு நாளில்
விமலனு முமையும் விடையுகைத் தாறு
தலைமக னிருந்த சரவணத் தடைந்து
முருகலர் குழலுமை முலைப்பா லூட்ட
இருவரு மின்பா லெடுத்தெடுத் தணைத்துத்
தேவர்தம் படைக்குச் சேனா பதியெனக்
காவல்கொண் டளிக்கக் கதிர்முடி சூட்டி
அயில்வேன் முதற்பல வாயுதங் கொடுத்துத்

திசையெலாஞ் செல்லுந் தேருமொன் றுதவிப்
பூதப் படைகள் புடைவரப் போய்நீ
ஓதுறு மவுணரை யொறுத்திடென் றனுப்ப
இருளைப் பகரு மிரவியைப் போலத்
தகுவரென் றவரைச் சமரிடை முருக்கிக்
*குருகுப் பேர்பெறுங் குன்றமுஞ் சூரன்
மருமமுந் துளைபட வடிவேல் விடுத்தே
யாவரும் வியப்புற விந்திரன் மகளாந்
தேவகுஞ் சரியைத் திருமணம் புணர்ந்திட்
டமரர் கோனுக் கமருல களித்துக்
குமர வேளுங் குவலயம் விளங்க
அமரா வதியி லமர்ந்தினி திருந்தான்
சமர வேலுடைச் சண்முகன் வடிவுகண்
டமரர் மாத ரனைவரு மயங்கி
எண்டருங் கற்பினை யிழந்தது கண்டே
அண்ட ரெல்லா மறைவுடன் கூடி
மாதொரு பாகனை வந்தடி வணங்கி
மருமலர்க் கடம்பனெம் மாநகர் புகாமல்
அருள்செய வேண்டுநீ யம்பிகா பதியென
இமையவ ருரைப்ப விறையவன் றானுங்
குமரனைக் கோபங் கொண்டுமுன் முனியக்
காவல்கொண் டெம்வினை கட்டறுத் தருளுஞ்
சேவலங் கொடியோன் றேசம் போகத்
திருந்திழை யுமையா ளருந்திய ரெய்தி
வருந்திமுன் னிற்க மங்கையைப் பார்த்து
மங்கை நீதான் வருந்துத லொழிகுதி
அங்கையாற் சூதெறித் தாடுவோம் வாவென
வென்றதுந் தோற்றதும் விளம்புவார் யாரெனக்
குன்றமென் முலையாள் கூறிய சமயம்
புற்றர வணிந்த புனிதனைக் காணவங்
குற்றனன் றிருமா லூழ்வினை வலியாற்
சக்கிர பாணியைச் சான்றெனக் குறித்து
மிக்கதோர் சூது விருப்புட னாடச்
சாயக நேருந் தடநெருங் கருங்கண்
நாயகி வெல்ல நாயகன் றோப்ப
இன்பவா யிதழுமை யான்வென் றேனென
எம்பெரு மானும் யான்வென் றேனென
ஒருவர்க் கொருவ ருத்தரம் பேசி

---

*குருவு - கிரவுஞ்சம்

இருவருஞ் சாட்சி யிவனைக் கேட்ப
மாமனை வதைத்த மான்முக நோக்கிக்
காமனை யெரித்தோன் கட்கடை காட்ட
வென்ற நாயகி தோற்றா ளென்றுந்
தோற்ற நாயகன் வென்றா னென்றும்
ஒன்றிய *பொய்க்கரி யுடனங் குரைப்பக்
கன்றிய மனத்தொடு கவுரியங் குருத்து
நோக்கிநீ யிருந்தும் நுவன்றிலை யுண்மை
வாக்கினி லொன்றாய் மனத்தினி லொன்றாய்
மைக்கரி யுரித்தோன் வதன நோக்கிப்
பொய்க்கரி யுரைத்த புன்மையி னாலே
கனலென வயிற்றிற் கடும்பசி கனற்ற
நிலமிசைக் குருட்டு நெட்டுடற் பாம்பாய்க்
கடகரி முகத்துக் கடவுள்வீற் றிருக்கும்
வடதரு நீழலிற் கிடவெனச் சபித்தாள்
முளரிகள் பூத்த முகினிறத் துருப்போய்த்
துளவணி மருகனுந் துணைவிழி யிழந்தே
ஆண்டரைக் கணத்தி லாயிரம் யோசனை
நீண்டபைப் பாந்த ளெட்டுட லெடுத்து
வளர்மருப் பொன்றுடை வள்ளல்வீற் றிருக்குங்
கிளர்சினை யாலின் கீழ்க்கிடந் தனனால்
திரிகடக் கரியின் றிருமுகக் கடவுளும்
வழிபடு மடியார் வல்வினை தீர்த்தே
எழில்பெறு வடமரத் தின்கீ ழிருந்தான்
கம்பமா முகத்துக் கடவுடன் பெருமையை
அம்புலி யோருக் கறிவிப் போமென
உம்ப ருலகத் தோரெழு கன்னியர்
தம்பநூ லேணியிற் றாரணி வந்து
கரிமுகக் கடவுளை கைதொழு தேத்திக்
கார்த்திகைக் கார்த்திகை கழித்தபின் னாளில்
ஆர்த்த கலிங்கத் தணியிழை வாங்கி
இருபத் தோரிழை யின்புறக் கட்டி
ஒருபோ துண்டி யுண்டொரு மனமாய்
வேதத் தாதியும் பூமியி லெழுத்தும்
ஆதிவி நாயகற் கானவெ ழுத்தும்
மூன்றெழுத் ததனான் மொழிந்தமந் திரமும்
தேன்றருங் குழலியர் சிந்தையுட் செபித்தே
உரைதரு பதினா றுபசா ரத்தால்

* பொய்க்கரி - சாட்சி

வரைமகண் மதலையை வழிபா டாற்றி
இருபது நாளு மிப்படி நோற்று
மற்றநா ளைங்கர மாமுகன் பிறந்த
தற்றைநாட் சதயமு மாறாம் பக்கமுஞ்
சேருமத் தினத்திற் றெளிபுன லாடி
வாரண முகத்தோன் வருபெருங் கோயில்
சீர்பெற மெழுகித் திருவிளக் கேற்றிக்
குலவுபொற் கலைகள் கொடுவிதா னித்து
மலர்பல கொடுத்திடு மாலைக ளாற்றிக்
கொலைபுரி வடிவேற் குகற்குமுன் வருகை
மலைமுகக் கடவுளை மஞ்சன மாட்டிப்
பொற்கலை நன்னூற் பூந்துகில் சாத்திச்
சொற்பெறு சந்தனச் சுகந்தம் பூசிச்
செருந்தி சண்பகஞ் செங்கழு நீரொடு
குருத்து மல்லிகை கோங்கொடு பிச்சி
கருமுகை புன்னை கடிகமழ் பாதிரி
மருவிரி ஞாழன் மகிழிரு வாட்டி
தாமரை முல்லை தழையவிழ் கொன்றை
பூமலர் நொச்சி பூத்தமைக் குவளை
காந்த ளாத்தி கடம்புசெவ் வந்தி
வாய்ந்தநல் லெருக்கு மலர்க்கர வீரம்
பச்சிலை நொச்சி படர்கொடி யறுகு
முத்தளைக் கூவிள முதலிய சாத்தித்
தூபதீ பங்கள் சுகம்பெறக் கொடுத்தே
அப்ப மோதக மவலெள் ளுருண்டை
முப்பழத் தேங்காய் முதிர்மொழிக் கரும்பு
சீனிதேன் சர்க்கரை செவ்விள நீருடன்
பாளறு நெய்தயிர் பருப்புடன் போனகங்
கற்பகக் கடவுள் களித்திடத் திருமுன்
பொற்புறப் படைத்துப் பூசனை பண்ணி
நோற்பது கண்டு நோவா திருந்த
பாப்புரு வாகிய பஞ்சா யுதனும்
யாப்புறு கொங்கையீர் யானுநோற் பேனென
ஆங்கவன் றனக்கும் வேண்டுவ தளித்துப்
பாங்கொடிவ் விரதம் பரிந்துநோற் பித்தார்
அண்டர்நா யகனா மைங்கர னருளால்
விண்டுவும் பண்டுள வேடம் பெற்றே
உஞ்சைமா நகர்புகுந் துமையொடு விமலன்
கஞ்சநாண் மலர்ப்பதங் கைதொழு திடலும்

பஞ்சிமென் சீறடிப் பார்ப்பதி நெஞ்சின்
வெஞ்சின மிகுந்து விமலனை நோக்கி
யானிடுஞ் சாப நீங்கிய தேனென
மானெடுங் கண்ணி மணிக்கத வடைப்ப
இறையவ னிதற்குக் காரண மேதென
மறிகடற் றுயிலு மாயவ னுரைப்பான்
பிறைமருப் பொன்றுடைப் பிள்ளையன் றெனக்குத்
தந்தருள் புரிந்த தவப்பய னீதெனச்
சிந்தை மகிழ்ந்து தேவர் தவனும்
பூங்கொடி யடைந்த பொற்றாழ் நீங்கச்
சாங்குமுன் னுரைத்த சக்கர பாணி
இக்கதை சொல்ல வக்கணி சடையனும்
மிக்கநல் விரதம் விருப்புட னோற்றபின்
மாதுமை யடைந்த வன்றாழ் நீங்கி
நாதனை நணுகிட நம்பனு நகைத்தான்
நானோ வந்து நகையா னதுவெனத்
தேனேர் மொழியா டௌியக் கூறென
நன்மதி நுதலாய் நானிலந் தன்னில்
உன்மக நோன்பி னுறுதி யறிந்து
சிந்தை மகிழ்ந்து சிரித்தேன் யானென
அந்தமி லரனை யாயிழை வணங்கிப்
பொருஞ்சூ ரறவேல் போக்கிய குமரன்
வரும்படி யானும் வருந்திநோற் பேனென
இறையவன் கதைசொல வேந்திழை நோற்றபின்
குறமட மகளைக் குலமணம் புணர்ந்தோன்
சுடர்வடி வேலோன் றொல்வினை தீர்ந்து
தாதுமை வண்டுழுந் தாமத் தாமனை
மாதுமை யாளை வந்துகண் டனனே
கண்ணநீ கண்ணிலாக் கட்செவி யாகெனத்
தண்ணறுங் குழலுமை சாபமிட் டதுவும்
அக்குநீ றணியு மரன்முத லளித்த
விக்கின விநாயகன் விரதநோற் றதன்பின்
சுடர்க்கதை யேந்துந் துளவ மாலையன்
விடப்பணி யுருவம் விட்டுநீங் கியதும்
பரிவுகொள் கூத்துடைப் பரமனு நோற்றுப்
கவுரியன் றடைத்த கபாடந் திறந்ததும்
வாசமென் குழலுடை மாதுமை நோற்பத்
தேசம் போகிய செவ்வேள் வந்ததும்
வானவர் நோற்று வரங்கள் பெற்றதும்

நாரத முனிவ னவின்றிடக் கேட்டே
இந்நிலந் தன்னி லிவ்விர தத்தை
மன்னவன் வச்சிர மாலிமுன் னோற்றுக்
காயத் தெழுந்த கடும்பிணி தீர்ந்து
மாயிரும் புவியின் மன்னனாய் வாழ்ந்து
தடமுலைத் திலோத்தமை தனைமணம் புணர்ந்து
மழவிடை போற்பல மைந்தரைப் பெற்றுக்
கடைமுறை வெள்ளியங் கயிலையி லுற்றான்
பரிவொடிவ் விரதம் பாரகந் தன்னில்
விரைகமழ் நறுந்தார் விக்ரமா தித்தன்
மறிகடற் புவிபெற வருந்தி நோற்றிடுநாள்
மற்றவன் காதன் மடவர லொருத்தி
இற்றிடு மிடையா ளிலக்கண சுந்தரி
மெத்தவன் புடனிவ் விரதநோற் பேனென
அத்தந் தன்னி லணியிழை செறித்துச்
சித்த மகிழ்ந்து சிலநா ணோற்றபின்
உற்ற நோன்பி னறுதி மறந்து
கட்டிய விழையைக் காரிகை யவிழ்த்து
வற்றிய கொவ்வையின் மாடே போட
ஆங்கது தழைத்தே யலருந் தளிருமாய்ப்
பாங்குற வோங்கிப் படர்வது கண்டு
வேப்பஞ் சேரியிற் பொய்ச்சிறை யிருந்த
பூப்பயில் குழல்சேர் பொற்றொடி யொருத்தி
அவ்விய மில்லா ளவ்விடந் தன்னிற்
கொவ்வை யடகு கொய்வாள் குறுகி
இழையது கிடப்பக் கண்டவ ளெடுத்துக்
குழைதவழ் வரிவிழிக் கோதைகைக் கட்டி
அப்பமோ டடைக்கா யவைபல வைத்துச்
செப்ப முடனே திருந்திழை நோற்றிடக்
கரிமுகத் தண்ணல் கருணை கூர்ந்து
பண்டையி லிரட்டி பதமவட் கருளக்
கொண்டுபோ யரசனுங் கோயிலுள் வைத்தான்
விக்கிரமா தித்தன் விழிதுயில் கொள்ள
உக்கிர மான வுடைமணி கட்டித்
தண்டையுஞ் சிலம்புந் தாளினின் றொலிப்பக்
கொண்டல் போல்வருங் குஞ்சர முகத்தோன்
மனமிகக் கலங்கு மன்னவன் றன்னிடங்
கனவினில் வந்து காரண மாக
இலக்கண சுந்தரி யிம்மனை யிருக்கிற்

கலக்கம் வந்திடுங் கழித்திடு புறத்தெனத்
துண்ணென வெழுந்து துணைவியை நோக்கிக்
கண்ணுறக் கண்ட கனவின் காரணம்
அண்ண லுரைத்திடு மவ்விழி தன்னில்
ஆனை குதிரை யவைபல மடிவுற
மாநகர் கேடுறும் வகையது கண்டு
இமைப்பொழு திவளிங் கிருக்கலா காதென
அயற்கடை யவனு மகற்றிய பின்னர்
வணிகன் றனது மனைபுகுந் திருப்ப
மணியு முத்தும் வலியகல் லாய்விட
அணியிழை தன்னை யவனு மகற்ற
உழவர்தம் மனையி லுற்றவ ளிருப்ப
வளர்பயி ரழிந்து வளம்பல குன்ற
அயன்மனை யவரு மகற்றிய பின்னர்த்
குயவன் மனையிற் கோற்றொடி செல்லக்
குயக்கல முடைந்து கொள்ளை போக
அயற்கடை யவனு மகற்றிய பின்னர்த்
தூசுதூய் தாக்குந் தொழிலோர் மனைபுகத்
தூசுக ளெல்லாந் துணிந்துவே றாகத்
தூசரு மவளைத் தூரஞ் செய்ய
மாலைக் காரன் வளமனை புகலும்
மாலை பாம்பாம் வகையது கண்டு
ஞால மெல்லா நடுங்கவந் துதித்தாய்
சாலவும் பாவிநீ தான்யா ரென்ன
வெம்மன மிகவு மேவி முனிவுறா
அம்மனை யவனு மகற்றிய பின்னர்
அவ்வை தன்மனை அவள்புகுந் திருப்ப
அவ்வை செல்ல அகங்க டோறும்
வைதன ரெறிந்தனர் மறியத் தள்ளினர்
கைகொடு குற்றினர் கண்டோர் பழித்தனர்
அவ்வை மீண்டுதன் னகமதிற் சென்று
இவ்வகைக் கன்னிநீ யாரென வினாவக்
காத்தாண் டுலகு கருணையோ டாண்ட
மார்த்தாண்ட ராசன் மாமக ளொருத்தி
எல்லார்க்கு மூத்தா ளிலக்கண சுந்தரி
சொல்லுவிக் கிரம சூரியன் மனையெனச்
சீர்கெட விருந்த தெரிவையை நோக்கி
நீரது கொண்டு நிலமெழு கிடுகெனச்
சாணி யெடுக்கத் தையலுஞ் சென்றாள்

சாணியு முழுத்துத் தண்ணீர் வற்றிப்
பேணிய புழுவாய்ப் பெரிது தோன்ற
மானேர் விழியாள் வருந்துதல் கண்டு
தானே சென்று சாணி யெடுத்துத்
தண்ணீர் கொணர்ந்து தரைமெழுக் கிட்டு
*மண்ணிய வீட்டின் மணிவிளக் கேற்றிப்
புத்தக மெடுத்து வாவெனப் புகலப்
புத்தகம் பாம்பாய்ப் பொருந்திநின் றாட
மெத்தவுண் ணடுங்கி வீழ்ந்தவள் கிடப்பப்
கொவ்வையங் கனிவாய்க் கோதையை விலக்கி
அவ்வை தானே யகமதிற் சென்று
புத்தக மெடுத்துப் பொருந்தப் பார்த்து
வித்தக நம்பி விநாயக மூர்த்தி
கற்பகப் பிள்ளைசெய் காரிய மிதுவென
உத்தமி யவ்வை யுணர்ந்துமுன் னறிந்து
தவநெறி பிழைத்த தையலை நோக்கி
நுவலரும் விநாயக நோன்புநோற் றிடுமெனக்
கரத்துமூ வேழிழைக் காப்புக் கட்டி
அப்பமு மவலும் மாம்பல பண்டமுஞ்
செப்பம தாகத் திருமுன் வைத்தே
அவ்வை கதைசொல ஆயிழை கேட்டு
மத்தகக் களிற்றின் மகாவிர தத்தை
வித்தக மாக விளங்கிழை நோற்றுக்
கற்பக நம்பி கருணைபெற் றதற்பின்
சக்கிர வாள சைனியத் தோடு
விக்கிரமா தித்தன் வேட்டையிற் சென்று
தானுஞ் சேனையுந் தண்ணீர் விரும்பி
எவ்வகை செய்வோ மெனவுள மெலிந்தே
அவ்வை தன்மனை யங்கவ ரணுக
எய்துந் தாகமு மிளைப்புங் கண்டு
செவ்வே யவற்றைத் தீர்க்க வெண்ணி
இலக்கண சுந்தரி யென்பவ டன்னை
அப்பமு நீரு மரசற் கருளெனச்
செப்பிய வன்னை திருமொழிப் பாடியே
உண்ணீர்க் கரகமு மொருபணி காரமும்
பண்ணேர் மொழியார் பார்த்திபற் குதவ
ஒப்பறு படையு முயர்படை வேந்தனும்

*மண்ணிய - சுத்திசெய்த

அப்பசி தீர அருந்திய பின்னர்
ஆனை குதிரை யவைகளு முண்டுந்
தானது தொலையாத் தன்மையைக் கண்டே
இவ்வகை சமைத்தநீ யாரென வினவ
மவ்வலங் குழலாள் மௌனமாய் நிற்ப
அவ்வை தான்சென் றரசர்க் குரைப்பாள்
கணபதி நோன்பின் காரணங் காணிது
குணமுடை யிவளுன் குலமனை யாட்டி
இலக்கண சுந்தரி யென்றவ்வை கூற
மங்கையை நோக்கி மனமிக மகிழ்ந்து
திங்கணேர் வெள்ளிச் சிவிகையி னேற்றிக்
கொண்டூர் புகுந்தான் கொற்றவ வேந்தனும்
ஒண்டொடி யாரி லுயர்பத முதவினன்
சிந்துர நுதலார் சென்றடி பணியச்
சுந்தரி யிருந்தாள் சுகத்துடன் மகிழ்ந்தே.

**நூற்பயன்**

பொன்னுமிகும் கல்விமிகும் புத்திரரோ டெப்பொருளும்
மன்னு நவமணியும் வந்தணுகும் - உன்னி
ஒருக்கொம்பின் யானைமுக வுத்தமனார் நோன்பின்
றிருக்கதையைக் கேட்கச் சிறந்து.

பொற்பனைக்கை முக்கட் புகர்முகத்துப் பொன்மவுலிக்
கற்பகத்தி நோன்பின் கதைதன்னைச் - சொற்பெருகக்
கற்றவரு நோற்றவருங் காதலித்துக் கேட்டவரும்
பெற்றிடுவர் கற்பகத்தின் பேறு.

வெள்ளை யெருதேறும் விரிசடையோன் பெற்றெடுத்த
பிள்ளையார் நோன்பின் பெருங்கதையை - உள்ளபடி
நோற்றார் மிகவாழ்வார் நோலா தருகிருந்து
கேட்டோர்க்கும் வாராது கேடு.

சூலிலார் நோக்கிற் சுதரை மிகப்பெறுவார்
சாலமிகும் வெங்கலியார் தானோற்கில் - மேலைப்
பிறப்பெல்லா நல்ல பெருஞ்செல்வ மெய்திச்
சிறப்பிலே வாழ்வார் சிறந்து.

**பிள்ளையார் கதை முற்றுப்பெற்றது.**

திருச்சிற்றம்பலம்.

# பொது அறிவு

## சர்வதேச குறியீடுகள்

| | | |
|---|---|---|
| ஒலிவ் மரத்தின் இலை | - | சமாதானம் |
| வெண்புறா | - | சமாதானம் |
| தாமரை | - | பண்பாடு, நாகரிகம் |
| கறுப்புக் கொடி | - | துக்கம், எதிர்ப்பு |
| எலும்பு நடுவில் மண்டையோடு | - | ஆபத்து |
| செஞ்சிலுவை | - | மருத்துவமைன |
| செம்பிறை | - | அரபு நாடுகளின் செஞ்சிலுவைச் சங்கம் |
| கையில் தராசு ஏந்திய பெண் | - | நீதி |
| அரைக் கம்பத்தில் கொடி | - | இரங்கல் |
| தலைகீழான கொடி | - | துன்பம் |
| சிகப்பு முக்கோணம் | - | குடும்பக் கட்டுப்பாடு |
| வெள்ளைக் கொடி | - | சமாதானம், பௌத்தர்களின் துக்கா |
| சுண்டு விரலும் நடு விரலும் V வடிவில் | - | வெற்றி |
| பச்சை விளக்கு | - | சாதகம், அனுமதி |
| மஞ்சள் விளக்கு | - | தயார் நிலை |

## உலக அதிசயங்கள்

| | | |
|---|---|---|
| பிரமிட்டுகள் | - | எகிப்து |
| தாஜ்மகால் | - | இந்தியா |
| பெருஞ்சுவர் | - | சீனா |
| சுதந்திர சிலை | - | அமெரிக்கா |
| நயகரா நீர்வீழ்ச்சி | - | வட அமெரிக்கா |
| சாய்ந்த கோபுரம் | - | எகிப்து |
| தொங்கு தோட்டம் | - | பபிலோனியா |

## உலகின் முக்கிய தினங்கள்

| | | |
|---|---|---|
| தேசிய இளைஞர் தினம் | - | ஜனவரி 12 |
| தேசிய அறிவியல் தினம் | - | பெப்ரவரி 28 |
| சர்வதேச பெண்கள் தினம் | - | மார்ச் 8 |
| பொதுநல வாய தினம் | - | மார்ச் 11 |
| உலக சிக்கன தினம் | - | மார்ச் 13 |
| உலக ஊனமுற்றோர் தினம் | - | மார்ச் 15 |
| உலக வன தினம் | - | மார்ச் 8 |
| உலக நன்னீர் தினம் | - | மார்ச் 22 |
| உலக வளிமண்டல தினம் | - | மார்ச் 23 |
| சர்வதேச சுகாதார தினம் | - | ஏப்ரல் 7 |
| உலக விண்வெளி தினம் | - | ஏப்ரல் 12 |
| உலக புவி தினம் | - | ஏப்ரல் 22 |
| உலக தொழிலாளர் தினம் | - | மே 1 |
| உலக பத்திரிகை தினம் | - | மே 3 |
| உலக செஞ்சிலுவை சங்க தினம் | - | மே 8 |
| உலக அன்னையர் தினம் | - | மே 9 |
| சர்வதேச குடும்ப தினம் | - | மே 15 |
| உலக தகவல் தொடர்பு தினம் | - | மே 17 |
| உலக புகைத்தல் எதிர்ப்பு தினம் | - | மே 31 |
| உலக சூழல் பாதுகாப்பு தினம் | - | யூன் 5 |
| உலக சுற்றாடல் தினம் | - | யூலை 5 |
| உலக வறுமை ஒழிப்பு தினம் | - | யூலை 17 |
| அகதிகள் தினம் | - | யூலை 28 |
| உலக எழுத்தறிவு தினம் | - | செப்ரெம்பர் 8 |
| உலக ஓசோன் தினம் | - | செப்ரெம்பர் 16 |
| உலக சிறுவர், முதியோர் தினம் | - | அக்டோபர் 1 |
| உலக ஆசிரியர் தினம் | - | அக்டோபர் 6 |
| உலக உணவு தினம் | - | அக்டோபர் 16 |
| ஐக்கிய நாடுகள் தினம் | - | அக்டோபர் 24 |
| உலக எயிட்ஸ் தினம் | - | டிசம்பர் 1 |

## பிரிக்கும் நீரிணைகளும் பிரிவுபடும் நிலங்களும்

| | | |
|---|---|---|
| பாக்கு நீரிணை | - | இந்தியாவிலிருந்து இலங்கை |
| பீரிங் நீரிணை | - | ஆசியாவிலிருந்து வட அமெரிக்கா |
| பனாமா நீரிணை | - | வட அமெரிக்காவிலிருந்து தென் அமெரிக்கா |
| டோவர் நீரிணை | - | பிரான்சிலிருந்து பிரித்தானியா |
| மகெலன் நீரிணை | - | தென் அமெரிக்காவிலிருந்து தியாரடெல் பியூகா தீவு |
| மொசாம்பிக் நீரிணை | - | ஆபிரிக்காவிலிருந்து மடகாஸ்கர் |
| மலாக்கா நீரிை | - | மலேசியா, சிங்கப்பூரிலிருந்து சுமத்திரா தீவுகள் |

## பெரும் பாலை நிலங்களும் - நாடுகளும்

| | | |
|---|---|---|
| சஹாரா | - | வட அமெரிக்கா |
| லிபியா | - | வட ஆபிரிக்கா |
| ஆஸ்திரேலியன் | - | ஆஸ்திரேலியா |
| விக்டோரியா | - | ஆஸ்திரேலியா |
| சிரியா | - | அரேபியா |
| அரேபியன் | - | அரேபியா |
| கோபி | - | மொங்கோலியா |
| ருபால்காலி | - | அரேபியா |
| கலகாரி | - | போத்ஸ்வானா |
| பெருமணல் | - | ஆஸ்திரேலியா |
| தக்ணமக்கான் | - | சீனா |
| அருந்தா | - | ஆஸ்திரேலியா |
| நுபியா | - | வட ஆபிரிக்கா |
| தார் | - | வடமேற்கு இந்தியா |
| கிஸில்ரும் | - | மத்திய துருக்கிஸ்தான் |

## உலகின் விவசாய நிறுவனங்கள்

சர்வதேச அரிசி ஆராய்ச்சி நிறுவனம் - **பிலிப்பைன்ஸ்**
சர்வதேச கோதுமை, சோளம், அபிவிருத்தி மத்திய நிலையம் - **மெக்சிக்கோ**
சர்வதேச வெப்பவலய விவசாய ஸ்தாபனம் - **நைஜீரியா**
சர்வதேச உருளைக்கிழங்கு நிலையம் - **பீரு**
சர்வதேச பயிர் ஆராய்ச்சி நிறுவனம் - **இந்தியா**
மிருக நோய்பற்றிய சர்வதேச ஆராய்ச்சி நிறுவனம் - **கென்யா**

## அறிந்து கொள்ளுங்கள்

உலகில் ஆகக்கூடிய சனத்தொகை கொண்ட நாடு - ***சீனா***
உலகில் செப்பு அதிகமாகக் கிடைக்கும் நாடு - ***சிலி***
உலகில் அதிக தீவுகளைக் கொண்ட நாடு - **பிலிப்பைன்ஸ்**
உலகில் மிகப்பெரிய தீபகற்பம் - **அராபியா**
உலகில் பெரிய நன்னீர் ஏரி - **சுப்பீரியர்**
'மொனலிசா' எனும் பிரசித்தி பெற்ற ஓவியத்தை வரைந்தவர் - **லியானாடோ டாவின்சி**
இலங்கையின் முதலாவது பிரித்தானிய ஆள்பதி - **பிரட்றிக் நோத்**
உலகின் மிகப்பெரிய ஸ்ரேடியம் - **பிராக்**
அமெரிக்க ஜனாதிபதியின் வாசஸ்தலம் - **வெள்ளை மாளிகை**
இருதய மாற்று சிகிச்சை முறையைக் கண்டுபிடித்தவர் - **கலாநிதி கிரிஸ்ரியன் பேனாட்**
பாரதி பாடிய பராசக்தி என்னும் நூலின் ஆசிரியர் - **கவிஞர் க. சொக்கலிங்கம்**
ஐக்கிய நாடுகள் சபையின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம் - **நியூயோர்க்**
ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகள் - **அமெரிக்கா, ரஷ்யா, பிரித்தானியா, சீனா, பிரான்ஸ்**
ஐரோப்பிய நாடுகளின் பொதுவான நாணய அலகு - **யூரோ**
தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பு - **சார்க்**
இலங்கையின் தேயிலை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம் - **தலவாக்கொல்லை**

இலங்கைப் பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம்
- **அலரிமாளிகை**

இலங்கையின் தேசிய கல்வி நிறுவகம் அமைந்துள்ள இடம்
- **மஹரகம**

இலங்கையின் முதலாவது மாநகரசபை - **கொழும்பு**

யுனிசெப் நிறுவனம் ஆரம்பக்கப்பட்ட ஆண்டு - **1946**

சாரண இயக்கத்தின் தந்தை - **பேடல் பவல் பிரபு**

## எழுதியவர்கள்

| | | |
|---|---|---|
| ஆத்திசூடி | - | ஔவையார் |
| நளவெண்பா | - | புகழேந்திப்புலவர் |
| பெரியபுராணம் | - | சேக்கிழார் |
| கந்தபுராணம் | - | கச்சியப்ப சிவாச்சாரியார் |
| திருவிளையாடல் | - | பரஞ்சோதி முனிவர் |
| இராமாயணம் | - | வால்மீகி முனிவர் |
| திருக்குறள் | - | திருவள்ளுவர் |
| சீறாப்புராணம் | - | உமறுப்புலவர் |
| திருப்புகழ் | - | அருணகிரிநாதர் |
| சத்தியசோதனை | - | மகாத்மாகாந்தி |
| பாஞ்சாலி சபதம் | - | பாரதியார் |
| மகாபாரதம் | - | வியாசர் |
| சிலப்பதிகாரம் | - | இளங்கோ அடிகள் |
| பகவத்கீதை | - | வேதவியாசர் |
| நற்சிந்தனை | - | யோகர் சுவாமிகள் |

## நிலங்கள்

| | | |
|---|---|---|
| குறிஞ்சி | - | மலையும் மலை சார்ந்த இடமும் |
| மருதம் | - | வயலும் வயல் சார்ந்த இடமும் |
| முல்லை | - | காடும் காடு சார்ந்த இடமும் |
| பாலை | - | மணலும் மணல் சார்ந்த இடமும் |
| நெய்தல் | - | கடலும் கடல் சார்ந்த இடமும் |




கடந்த 15-10-2005ல் இறைநிழல் சென்றடைந்த

எங்கள் அன்புத் தெய்வம்

## திருமதி. சரஸ்வதி - தம்பித்துரை அவர்கள்


- ☆ இறைபதமடைந்த செய்திகேட்டு உடன் வந்து உதவிகள் செய்த உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும்,
- ☆ இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டோர்க்கும்,
- ☆ வெளிநாட்டிலிருந்து தொலைபேசி, தொலைநகல் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும்,
- ☆ இன்றுவரை பல வழிகளிலும் வேண்டிய உதவிகள் வழங்கி, ஆறுதல் வழங்கிய அனைவருக்கும்,
- ☆ இம்மலரை ஆக்கியுதவியவருக்கும்,
- ☆ அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய நிகழ்வில் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்த அனைவருக்கும்

எமது மனமார்ந்த நன்றியைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

*இங்ஙனம்,*
*குடும்பத்தினர்.*

*309, கண்டி வீதி,*
*அரியாலை,*
*யாழ்ப்பாணம்.*
*14-11-2005*

# வம்ச விருட்ச


சதாசிவம் + நாகம்மா
தர்மலிங்கம் (அமரர்)
பாலசுப்பிரமணியம் (அமரர்)
பாலாம்பிகை (அமரர்)
சரஸ்வதி
மகாதேவன்
தம்பித்துரை (அமரர்)
விஜயலட்சு (அமரர்)
தனபாலசிங்கம் + தனலட்சுமி
தமீசன்
மகாலட்சுமி + நவரத்தினராசா
வசிகரன்
வாகீசன்
பிரசாந்தினி
மனோஜ்
விஜயலட்சுமி + சங்கரநாதன்
கிருசாந்தி
காண்டீபன்
ஜிந்துசியா
கஜனி
றஜிவன்
லிங்கராஜன் + குணநிதி
ஆதரை
அஞ்சலி
அர்ச்சனா

# சை விருட்சம்

காதேவன்

சிவக்கொழுந்து + சின்னம்மா

↓


- தம்பித்துரை (அமரர்)
- விஜயலட்சுமி (அமரர்)
- சறோஜினி
- சிவபாக்கியம்
- யோகம்மா
- முத்துக்குமாரசாமி
- யோகநாதன்

---

- லிங்கராஜன் + குணநிதி
  ↓
  ஆதரை
  அஞ்சலி
  அர்ச்சனா
- கணேசலிங்கம் + வாமதனி
  ↓
  நகிதா
- சோதிலட்சுமி + பரமசிவம்
  ↓
  யாழினி
  கம்பதாசன்
  ஜனனி
  குயிலினி
- மோகனலட்சுமி + முருகானந்தன்
  ↓
  கஸ்தூரி

# கீதாசாரம்

"எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்.
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்".





இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

**- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -**

ஸ்ரீ மீனாட்சி அச்சகம், 315, கச்சேரி நல்லூர் வீதி, நல்லூர் - ☎ 2223586